DINAMALAR

4 JULY 2023

PAGE 2

# பி.எச்டி.,க்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

**புதுச்சேரி,ஜூலை 4–**

புதுச்சேரி பல்கலையில், பி.எச்டி., படிப்புகளுக்கு விண்ணப்பிக்க, வரும் 10ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் அதன் இணைப்பு கல்லூரிகளில் 750க்கும் மேற்பட்ட பி.எச்டி., படிப்புக்கான இடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கான சேர்க்கை நுழைவு தேர்வு அடிப்படையில் நடக்க உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் கடந்த 8ம் தேதி முதல், 29ம் தேதி வரை 'ஆன்லைனில்' பெறப்பட்டது. மாணவர்களின் நலன் கருதி, விண்ணப்பிக்க காலக்கெடு வரும் 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த கல்வியாண்டில் ஹிந்தி, சுற்றுலா, ஆங்கிலம் உள்ளிட்ட பிரிவுகளில் புதிதாக பி.எச்டி., படிப்புகள் துவங்கப்பட்டுள்ளன. எஸ்.சி., எஸ்.டி., மாணவர்களுக்கு விண்ணப்ப கட்டணம் ரூ.500. இதர பிரிவினருக்கு ரூ.1000 மாற்றுத்திறனாளிகள், மூன்றாம் பாலினத்தவர்களுக்கு விண்ணப்ப கட்டணம் இல்லை.

மேலும் விபரம் வேண்டுவோர் https://www.pondiuni.edu.in/admissions-2023-24/ என்ற இணைய தளத்தை பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

DINAMALAR

4 JULY 2023

PAGE 2

# 4 ஆண்டு பி.எட்.,படிப்பு விண்ணப்பிக்க அழைப்பு

**புதுச்சேரி, ஜூலை 4–**

புதுச்சேரி பல்கலையில் ஒருங்கிணைந்த நான்கு ஆண்டு கல்வியியல் படிப்பில் சேர்வதற்கு, வரும் 19ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

புதுச்சேரி பல்கலையில் இந்த கல்வியாண்டில் (2023–24) பி.ஏ.,பி.எட்., மற்றும் பி.எஸ்.சி.,பி.எட்., ஒருங்கிணைந்த நான்காண்டு பட்டப்படிப்பு துவங்கப்பட்டுள்ளது.

இப்படிப்பில் சேர தேசிய தேர்வு முகமை நடத்தும் தேசிய பொது நுழைவு தேர்வினை எழுத வேண்டும். இப்படிப்பில் சேர விரும்பும் மாணவ, மாணவிகள் வரும் 19ம் தேதிக்குள் https://ncet.samarth.ac.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இப்படிப்பில் சேருவதற்கான கல்வி தகுதிகள், www.pondiuni.edu.in/admissions---2023–24/ என்ற இணைய முகவரியில் வெளியிடப்பட்டுள்ளது.

DINAKARAN

4 JULY 2023

PAGE 12

ஒருங்கிணைந்த பிஎட் படிப்பில் சேர

# தேசிய பொது நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பம் வரவேற்பு

**புதுவை பல்கலை. அறிவிப்பு**

**புதுச்சேரி, ஜூன் 4:** புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் நான்காண்டு ஒருங்கிணைந்த பி.ஏ.பி.எட். மற்றும் பி.எஸ்சி. பி.எட் படிப்புகளில் நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை நடக்கவுள்ளது. இந்த படிப்புகளுக்கான சேர்க்கை தேசிய பொது நுழைவு தேர்வின் அடிப்படையில் தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும். நடப்பு 2023-24ம் ஆண்டிற்கான புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகம் வழங்கும் இந்த 4 ஆண்டு ஒருங்கிணைந்த படிப்புகளுக்கு சேர்க்கை பெற விரும்புவோர் வரும் ஜூலை 19ம் தேதிக்குள் *https://ncet.samarth.ac.in/* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் பி.ஏ., பி.எட் மற்றும் பி.எஸ்சி. பி.எட் ஆகிய படிப்புகளுக்கான தகுதி அளவுகோல்களை சரிபார்த்துக் கொள்ளலாம். புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக இணையதளத்தில், *(www.pondiuni.edu.in/admissions-2023-24/)* அந்தந்த பாடப்பிரிவுகளுக்கு தேவையான மொழிகள் மற்றும் குறிப்பிட்ட பாடத்தேர்வு தாளை தேர்ந்தெடுக்கலாம். இதுதொடர்பாக மேலும் புதிய தகவல்களை அறிய விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தேர்வு முகமை இணையதளங்களை பார்க்கலாம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAKARAN

4 JULY 2023

PAGE 13

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# பிஎச்.டி படிப்புக்கு விண்ணப்ப தேதி நீட்டிப்பு

**புதுச்சேரி, ஜூலை 4:** புதுச்சேரி பல்கலைக்கழக உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு பிரிவு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் நுழைவு தேர்வு மூலம் நிரப்பப்படவுள்ள பிஎச்டி படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு ஆன்லைன் விண்ணப்பிக்கும் நாள் ஜூலை 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பதிவு செய்து முடிக்க முடியாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது. பிஎச்டி படிக்க விரும்பும் மாணவர்கள் 2023-24 கல்வியாண்டுக்கான சேர்க்கை, தகுதியின்படி, *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/.* என்ற புதுவை பல்கலைக்கழக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

*2023-24* கல்வியாண்டில் பிஎச்.டி. இந்தி, சுற்றுலா படிப்புகள் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடப்பிரிவுகள் இப்போது சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், பிற பிஎச்டிக்கான பாடப்பிரிவுகளும் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் முன், பாடப்பிரிவுக்கான தகுதி, தேவைகளை சரிபார்க்க அறிவுறுத்தப்படுகிறார்கள். பி.எச்.டி. பற்றிய விவரங்கள், பல்கலைக்கழக பள்ளிகள், துறைகள், மையங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் வழங்கப்படும் படிப்புகள் உள்ளிட்ட தகவல்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ளது. சமீபத்திய தகவல்களை விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்வையிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

THE HINDU TAMIL

4 JULY 2023

PAGE 5

# புதுச்சேரி பல்கலையில் ஒருங்கிணைந்த பிஏ பிஎட், பிஎஸ்சி பிஎட் படிப்புகளில் சேரலாம்

**புதுச்சேரி**

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் நான்காண்டு ஒருங்கிணைந்த பி.ஏ. பி.எட். மற்றும் பி.எஸ்சி. பி.எட் படிப்புகளில் நடப்பு கல்வியாண்டில் சேர்க்கை நடக்கவுள்ளது. வரும் 19-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்.

இந்தப் படிப்புகளுக்கான சேர்க்கை தேசிய பொது நுழைவுத் தேர்வின் அடிப்படையில் தேசிய தேர்வு முகமையால் நடத்தப்படும்.

இதற்கான விவரங்களை https://ncet.samarth.ac.in/ என்ற தளத்தில் அறியலாம். ஆர்வமுள்ளவர்கள் பி.ஏ, பி.எட். மற்றும் பி.எஸ்சி. பி.எட் ஆகிய படிப்புகளுக்கான தகுதி அளவுகோல்களை இந்த தளத்தில் சரிபார்த்துக் கொள்ளலாம்.

மேலும் புதுச்சேரி மத்திய பல்கலைக்கழக இணையதளத்தில், (www.pondiuni.edu.in/admissions-2023-24/ ) இப்படிப்புக்குத் தேவையான மொழிகள் மற்றும் குறிப்பிட்ட பாடத் தேர்வுத் தாளைத் தேர்ந்தெடுக்கலாம்.

இதுதொடர்பாக மேலும் புதிய தகவல்களை அறிய விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழகம் மற்றும் தேசிய தேர்வு முகமை இணையதளங்களை பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

DINATHANTHI

4 JULY 2023

PAGE 13

# புதுவை பல்கலைக்கழகத்தில் புதிய ஆராய்ச்சி படிப்புகள் அறிமுகம்

## நுழைவு தேர்வுக்கு 10-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, ஜூலை.4-

புதுவை பல்கலைக்கழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஆராய்ச்சி படிப்புகளில் சேர வருகிற 10-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம்.

புதுவை பல்கலைக்கழகம் விடுத்துள்ள ஒரு செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

### காலம் நீட்டிப்பு

புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள ஆராய்ச்சி படிப்புகளில் (பி.எச்டி.) சேருவதற்கான நுழைவுத்தேர்வுக்கு விண்ணப்பிப்பது வருகிற 10-ந்தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. புதிதாக விண்ணப்பிப்பவர்களுக்கு இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்கள் (https://www.pondiuni.edu.in/admissions-2023-24) இணையதளத்தின் மூலம் விண்ணப்பிக்கலாம்.

### புதிய பாடப்பிரிவுகள்

மேலும் இந்தி, சுற்றுலா கல்வி, ஆங்கிலம் ஆகிய பிரிவுகளில் பி.எச்டி. பாடப்பிரிவுகள் இந்த கல்வியாண்டில் புதிதாகசேர்க்கப்பட்டுள்ளன. இதுதொடர்பான விவரங்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் இது பற்றிய விவரங்களை தெரிந்து நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம். பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கல்லூரிகளில் உள்ள பி.எச்டி. படிப்புகள் தொடர்பான விவரங்களும் இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### ஒருங்கிணைந்த படிப்புகள்

புதுவை பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள மற்றொரு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இந்த கல்வியாண்டில் (2023-24) ஒருங்கிணைந்த 4 ஆண்டு பட்டப்படிப்பினை (பி.ஏ. பி.எட்., பி.எஸ்சி. பி.எட்.) வழங்குகிறது. இதற்கான மாணவர் சேர்க்கை தேசிய தேர்வு முகமை நடத்தும் பொது நுழைவுத்தேர்வு மூலம் நடைபெற உள்ளது.

இந்த ஒருங்கிணைந்த பட்டப்படிப்பில் சேர விரும்பும் மாணவர்கள் https://ncet.samarath.ac.in என்ற இணையதளத்தின் மூலம் வருகிற 19-ந்தேதி வரை விண்ணப்பிக்கலாம். இதற்கான தகுதிகள் பிற விவரங்களை பல்கலைக்கழக இணையதளத்தில் (www.pondiuni.edu.in/admissions-2023-24) பார்த்து தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

The Hindu
4 July 2023
Page 2

# Joint Action Committee wants exam results declared soon

**The Hindu Bureau**
PUDUCHERRY

The Joint Action Committee (JAC) of teaching and non-teaching staff of Puducherry Government Society Colleges has urged the territorial government to direct Pondicherry University to declare the results of the semester exams of current academic year at the earliest in the interest of the student community.

In a statement, D. Ramkumar, president of the Pondicherry Society for Higher Education (PONSHE) said normally semester exams in all higher educational institutions would be conducted during April and May and the results declared in June.

This was to enable aspirants to enroll for postgraduate programmes anywhere in the country. However, this schedule was disturbed in the wake of the pandemic over the last few years.



Exams at Pondicherry University have been scheduled only from July 20. FILE PHOTO

Though several universities have reverted to the original schedule of holding exams in April and May, the exams at Pondicherry University are scheduled only from July 20.

**Students affected**

For 2021-22, the results of semester exams were declared only in September. As a result, many students had to forego their admission to other universities.

"Pondicherry University has announced the schedule for its final semester exams beginning on July 20 while the results are expected only during October. Due to the delayed declaration of results, students aspiring for postgraduate studies at institutions outside Puducherry are forced to lose one year to enable them to apply for the courses," he said.

The Puducherry Government should immediately intervene and direct Pondicherry University to declare the results of the current academic year at the earliest keeping in view the larger interest of the student community, Mr. Ramkumar added.

MAALAI MALAR

PAGE NO: 02 DATE: 04.07.23

புதுவை பல்கலைக்கழகத்தில்

# 4 ஆண்டு பி.எட். படிப்புக்கு விண்ணப்பம்

புதுச்சேரி, ஜூலை.4—

புதுவை பல்கலைக் கழகத்தில் இந்த கல்வி யாண்டில் பி.ஏ பி.எட்., மற்றும் பி.எஸ்.சி.பி.எட். ஒருங்கிணைந்த 4 ஆண்டு பட்டப்படிப்பு தொடங்கப்பட்டுள்ளது.

இந்த படிப்பில் சேர தேசிய தேர்வு முகமை நடத்தும் தேசிய பொது நுழைவு தேர்வை எழுத வேண்டும். இப்படிப்பில் சேர விரும்பும் மாணவ, மாணவிகள் வருகிற 19—ந் தேதிக்குள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இப்படிப்பில் சேர கல்வித்தகுதி விபரம் பல்கலைக்கழக இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

TAMIZH MURASU

PAGE NO: 02 DATE: 04.07.23

### புதுச்சேரி பல்கலைக்கழகத்தில்

# 4 ஆண்டு பி.எட். படிக்க விண்ணப்பிக்கலாம்

புதுச்சேரி, ஜூலை 4- மத்திய பல்கலைக்கழகத்தில் ஒருங்கிணைந்த 4 ஆண்டு கல்வியியல் படிப்புக்கு வருகிற 19ம் தேதிக்குள் விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

புதுச்சேரி அடுத்த காலாப்பட்டு மத்திய பல்கலைக் கழகத்தில், இந்த கல்வியாண்டில் (2023-24) பிஏ, பிஎட் மற்றும் பிஎஸ்சி, பிஎட், ஒருங்கிணைந்த 4 ஆண்டு பட்டப்படிப்பு துவங்கப்பட்டு உள்ளது. இதில் சேர தேசிய தேர்வு முகமை நடத்தும் தேசிய பொது நுழைவுத் தேர்வினை எழுத வேண்டும்.

இப்படிப்பில் சேர விரும்பும் மாணவ-மாணவிகள் வருகிற 19ம்தேதிக்குள் *https://ncet.samarth.ac.in* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். இப்படிப்பில் சேருவதற்கான கல்வி தகுதிகள், *www.pondiuni.edu.in/admissions---2023-24/* என்ற இணைய முகவரியில் வெளியிட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.